MAALAI MALAR

1 MAY 2023

PAGE 3



புதுவை

# மழலையர் பள்ளி பட்டமளிப்பு விழா

புதுச்சேரி, மே 1—

புதுவை பலகலைக்கழக டே கேர் சென்டர் மற்றும் முன் மழலையர் தொடக்க பள்ளியின் ஆண்டு விழா மற்றும் பட்டமளிப்பு விழா நடந்தது. துணைவேந்தர் குர்மீத்சிங், அவரின் மனைவி குர்மீத்கவுர், பதிவாளர் ரஜ்னீஷ்பூடானி சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர். பள்ளி ஒருங்கிணைப்பாளர் ரேகா ஆண்டறிக்கை வாசித்தார். தொடர்ந்து பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினர்கள் பட்டங்களை வழங்கி பாராட்டினர்.

குழந்தைகளுக்கு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் பெற்றோர், பணியாளர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

DINAMALAR

1 MAY 2023

PAGE 4

# பல்கலைக்கழக முன் மழலையர் பள்ளி குழந்தைகளுக்கு பட்டமளிப்பு



புதுச்சேரி பல்கலைக்கழக டே கேர் சென்டர் மற்றும் முன் மழலையர் துவக்க பள்ளியின் ஆண்டு விழா மற்றும் பட்டமளிப்பு விழா நடந்தது.

**புதுச்சேரி, மே 1–**
பல்கலைக்கழக முன் மழலையர் பள்ளி குழந்தைகளுக்கு பட்டமளிப்பு விழா நடந்தது.

புதுச்சேரி பல்கலைக் கழக டே கேர் சென்டர் மற்றும் முன் மழலையர் துவக்க பள்ளியின் ஆண்டு விழா மற்றும் பட்டமளிப்பு விழா நடந்தது.

துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங், அவரது மனைவி குர்மீத் கவுர், பதிவாளர் ரஜ்னீஷ் பூடானி சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். முன் மழலையர் துவக்க பள்ளியின் ஒருங்கிணைப்பாளர் ரேகா ஆண்டறிக்கை வாசித்தார்.

தொடர்ந்து முன் மழலையர் பள்ளி குழந்தைகளுக்கான பட்டமளிப்பு விழா நடந்தது.

சிறப்பு விருந்தினர்கள் பட்டங்களை வழங்கி பாராட்டினர். தொடர்ந்து குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசு வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் பெற்றோர்கள், பணியாளர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பாளர் ரேகா தலைமையில் டே கேர் சென்டர், முன் மழலையர் துவக்க பள்ளி ஆசிரியர்கள் செய்திருந்தனர்.